### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை! சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# வட கிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் - வெள்ளத்தடுப்புப் பணிகள்!

## அமைச்சர்கள் துரைமுருகன் - கே.என்.நேரு - எ.வ.வேலு - தங்கம் தென்னரசு - மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஆக.18-

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னேற் பாட்டுப் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்புப் பணிகள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின் வாரியம், இரயில்வே துறை, பி.எஸ்.என்.எல். உள்ளிட்ட சேவைத்துறைகளுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (16.8.2024) ரிப்பன் வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்வளத் துறையின் சார்பில் 162 கி.மீ. நீளத்திலான கூவம், அடையாறு மற்றும் கொசஸ்தலையாறு நீர்வழித்தடங்களும், 107.06 கி.மீ. நீளத்திலான 15 கால்வாய்களும், பெருநகர சென்னை மாநகராட்சி யின் சார்பில் 53.42 கி.மீ. நீளத்திலான 33 கால்வாய்களும், 3,040 கி.மீ. நீளத்திலான 11,770 மழைநீர் வடிகால்களும், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 237 கி.மீ. நீளத்திலான 42 மழைநீர் வடிகால்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### பெருநகர சென்னை மாநகராட்சி!

கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் கீழ், ரூ.3220 கோடி மதிப்பில் 675.37 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 559.65 கி.மீ. நீளத்திற்கும், ஜெர்மன் வளர்ச்சி வங்கி (Kfw) நிதியின் கீழ், கோவளம் வடிநிலப் பகுதி கட்டம்1ல் ரூ.150.45 கோடி மதிப்பில் 41.77 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 37.09 கி.மீ. நீளத்திற்கும், கோவளம் வடிநிலப் பகுதி கட்டம்2ல் ரூ.447.03 கோடி மதிப்பில் 118.77 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 85.71 கி.மீ. நீளத்திற்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கோவளம் வடிநிலப் பகுதி கட்டம்3ல் ரூ.760.10 கோடி மதிப்பில் 140.10 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.08.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மாநில பேரிடர் தடுப்பு மேலாண்மை நிதியின் கீழ், ரூ.188.28 கோடி மதிப்பில் 47.86 கி. மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 39.58 கி.மீ. நீளத்திற்கும், சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், ரூ.43.99 கோடி மதிப்பில் 11.47 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 7.78 கி.மீ. நீளத்திற்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையும் பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட அமைச்சர் பெருமக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

### தூர்வாரும் பணிகள்!

தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, 792 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளில் 611 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப் பட்டுள்ளது. மேலும், 69,017 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளில் 68,746 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, 1150 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளும், இரண்டாம் சுழற்சி யாக 70,304 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணி களும் நடைபெற்று வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு ஐந்து நபர்கள் வீதம் ஜீலை மாதம் முதல் ஆயிரம் களப் பணியாளர்களை கூடுதலாக பணியமர்த்தி வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல்கள் மற்றும் கழிவுகள் அகற்றும் பணியினை விரைந்து முடித்து மழைநீர் தேங்காவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.287.49 கோடி மதிப்பில் 42,08,985 சதுர மீட்டர் பரப்பளவில் 210 எண்ணிக்கையிலான குளங்கள் புனரமைப்புப் பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.200.56 கோடி மதிப்பில் 23,69,554 சதுர மீட்டர் பரப்பளவிலான 177 குளங்களில் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.82.62 கோடி மதிப்பில் 16,31,540 சதுர மீட்டர் பரப்பளவிலான 28 குளங்களில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள குளங்களில் தூர்வாரும் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு முடிக்கப்படும். குளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாருதல் மற்றும் புனரமைப்புப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மழைக்காலங்களில் நிலத்தடி நீரினை அதிகரிக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை 142 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் (Sponge Parks) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.8.25 கோடி மதிப்பில் 31 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்க ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன. பணிகளை விரைவில் தொடங்கி முடித்திட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அமைச்சர் பெருமக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினா ர்கள்.

### 12 இடங்களில் மழைநீர் சேமிப்பு!

பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை 12 இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் மற்றும் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.6.22 கோடி மதிப்பில் 19 இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் மற்றும் பம்புகள் அமைக்க ஒப்பம் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன. வடகிழக்குப் பருவமழையின் போது, தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கவைப்பதற்கு 169 நிவாரண மையங்களை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். மழைநீரினை வெளியேற்ற பல்வேறு குதிரைத் திறன்கள் கொண்ட 1183 மோட்டார் பம்புகளை செயல்படும் வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். 2 ஆம்பிபியன், 3 மின் ஆம்பிபியன், 4 ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்களைப் பயன்படுத்தி நீர்நிலைகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகளை அகற்றி தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். மழைநீர் வடிகால்களில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்ய கழிவுநீரை உறிஞ்சி சுத்தம் செய்யும் 7 இயந்திரங்களைப் பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டும். மழைக்காலங்களில் சாலைகள் மற்றும் தெருக்களில் விழும் மரங்களை அகற்றிட 305 மரஅறுவை இயந்திரங்கள், ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மர அறுவை இயந்திரங்கள் மற்றும் 24 Telescopic Pruners இயந்திரங்கள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்பதற்காக 109 படகுகள் மற்றும் பாப்காட், ஜே.சி.பி. ஆம்பிபியன், மரஅறுவை இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள், கனரக/இலகு ரகவாகனங்கள் உட்பட 1,019 இயந்திரங்கள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு மையத்தில் அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணிபுரிய வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள 16 சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள 6 சுரங்கப்பாதைகள் என 22 சுரங்கப்பாதைகளிலும் மழைநீர் வெளியேற்றும் வகையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு வழங்கும் வகையில் 388 அம்மா உணவகங்கள் மற்றும் 35 மைய சமையற் கூடங்கள் (Cluster Kitchen) பொது சமையல் கூடங்களாக செயல்படும் வகையில் தயார்நிலையில் இருக்க வேண்டும். மின்கசிவு ஏற்படாமல் இருக்க தூண் மற்றும் ஃபியூஸ் பாக்ஸ், தொங்கும் வயர்களை சரிபார்க்க மின்வாரிய குழுவினர் தயார் நிலையில் இருக்க வேண்டும். மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினருக்காக 52 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 101 நிலையான மற்றும் நடமாடும் மருத்துவ முகாம்கள், 1000 தற்காலிகப் பணியாளர்களை 200 வார்டுகளில் பணியமர்த்திட வேண்டும். மரம் வெட்டும் பணிகளுக்கு 150 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்த வேண்டும். மேலும், மழைக்கால முன்னெச்சரிக்கையாக ஆபத்தான விளம்பரப் பலகை மற்றும் உயர்கம்பங்களை அகற்றிட வேண்டும். வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக மாதிரி பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும். தனியார் தொண்டு நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்களின் பட்டியல்களை தயார் செய்ய வேண்டும். மீட்பு பணிகளுக்கான திட்டத்தினை வரையறுக்க வேண்டும். ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கண்காணிப்பு மையத்தில் (ICCC) சுரங்கப்பாதைகளில் மழைக்காலங்களில் நீர்த்தேக்கத்தை தொடர்ந்து கண்காணித்து அலுவலர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

### தமிழ்நாடு நீர்வளத்துறை!

நீர்வளத்துறையின் பராமரிப்பில் உள்ள 15 கால்வாய்களும் பருவமழைக்கு முன்னதாக முழுமையாக தூர்வாரப்பட வேண்டும். நீர்வழித்தடங்களில் உள்ள நிரம்பியுள்ள ஆகாயத்தாமரைகளை முழுமையாக அகற்றிட வேண்டும். முட்டுக்காடு, அடையாறு, கூவம் மற்றும் கொசஸ்தலையாறு உள்ளிட்ட நான்கு முகத்துவாரங்களில் மண் முழுவதும் அகற்றப்பட வேண்டும். ஏரிகள் மழைக்கு முன்னதாக தவணை முறையில் (Preempting of lakes prior to monsoon in regular basis) திறந்து விடப்பட வேண்டும். செம்பரம்பாக்கம் மற்றும் புழல் ஏரியில் பருமழைப் பொழிவிற்கு ஏற்ப திறந்து விடுவதில் சென்ற ஆண்டு மிகவும் உதவிகரமாக இருந்தது. ஆறுகள் மற்றும் ஏரிகளின் கரைகளை பலப்படுத்தி, பக்கிங்ஹாம் கால்வாயினை தூர்வார வேண்டும்.

சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம் மடுவு பாலப் பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் வேலை நடப்பதால் பாலத்தின் 5 மதகுகளிலும் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை வரும் மழைக்காலத்திற்கு முன்னதாக அகற்றி மழைநீர் தங்குதடையின்றி செல்ல வழிவகை செய்ய வேண்டும். இந்தப் பணிகளை மேற்கொள்வதால் துரைப்பாக்கம், மடிப்பாக்கம், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி, பள்ளிக்கரணை மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகள் மழைநீர்த்தேக்கத்தில் இருந்து விடுவிக்கப்படும்.

தெற்கு கூவம் சாலை, லாங்ஸ் கார்டன் சாலை மற்றும் மேற்கு கூவம் சாலை ஆகிய பகுதிகளுக்குட்பட்ட கூவம் நதியின் குறுக்கே போடப்பட்டுள்ள குப்பைகளை வரும் பருவமழைக்கு முன் அகற்றி மழைநீர் தங்குதடையின்றி செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### நெடுஞ்சாலைத்துறை!

ஜி.என்.டி. சாலை, 100 அடி சாலை, சி.டி.எச். சாலை, குன்றத்தூர் பிரதான சாலை, மவுண்ட் பூந்தமல்லி சாலை, ஜவஹர்லால் நேரு சாலை, தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலை, பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலை உள்ளிட்ட பிரதான சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும்.

### சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்!

வி.க.நகர் மண்டலம், வார்டு70க்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் இரட்டை கால்வாய் பணியினை விரைந்து முடித்து, பருமழைக்கு முன்னதாக, இரட்டை கால்வாயுடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சென்னை மெட்ரோ இரயில் பணிகளுக்காக அண்ணாநகர் மண்டலம், வார்டு100 மற்றும் 104க்குட்பட்ட புரசைவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் மில்லர்ஸ் சாலை, பார்னபி சாலை மற்றும் ஜே.என். சாலை, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு127, 128, 129 மற்றும் 130க்குட்பட்ட காளியம்மன் கோயில் தெரு மற்றும் ஆற்காடு சாலை, வார்டு132க்குட்பட்ட ஆற்காடு சாலை ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் தடைப்பட்டுள்ளது. இவ்விடங்களில் அதிக குதிரைத்திறன் கொண்ட நீரிறைக்கும் மோட்டார் பம்புகளை பொருத்தி மழைநீரினை வெளியேற்ற தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். அடையாறு மண்டலம், வார்டு171க்குட்பட்ட துர்காபாய் தேஷ் முக் சாலை மற்றும் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் சேதமடைந்த மழைநீர் வடிகாலினை உடனடியாக சீர்செய்திட வேண்டும். வார்டு173க்குட்பட்ட இந்திரா நகர் 2வது அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் இடிக்கப்பட்டதால் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் இருக்க கூடுதலாக 2 எண்ணிக்கையிலான 25 குதிரைத் திறன் கொண்ட மழைநீர் வெளியேற்றும் மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைக்க வேண்டும்.

### சென்னை குடிநீர் வாரியம்!

மழைக்காலங்களில் நீரிறைக்கும் நிலையங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும். சாலை வெட்டும் பணியினை குறித்த நேரத்தில் முடித்து, சாலையை சீரமைக்கும் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். சாலை வெட்டும் போது, முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### தெற்கு இரயில்வே துறை!

இரயில்வே பாதைகளின் கீழே உள்ள 42 எண்ணிக்கையிலான குறுக்கு மதகுகள் (Cross Culvert) முழுமையாக தூர்வாரப்பட வேண்டும். அம்பத்தூர் மண்டலம், வார்டு84க்குட்பட்ட பட்டரவாக்கம் இரயில்வே உபரிகால்வாயில் கால்வாய் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதற்கு பணி தொடர அனுமதி அளிப்பதன் மூலம் பட்டரவாக்கம், சிட்கோ தொழிற்பேட்டை மற்றும் கொரட்டூர் பகுதிகளில் வெள்ளம் ஏற்படுவது தவிர்க்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும், ஆலந்தூர் மண்டலம், வார்டு 162க்குட்பட்ட நோபல் தெரு, இரயில்வே கிராஸ் கல்வெர்ட் அமைக்கப்பட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

### தமிழ்நாடு மின் உற்பத்தி!

பருவமழைக்கு முன்னதாக பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் சீராக உயர்த்தி அமைக்க வேண்டும். மின் மாற்றி மற்றும் EB Pillar பெட்டிகள் சாலையில் இருந்து 3 அடி உயரமாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### சாலை மேம்பாட்டு நிறுவனம்!

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் சாலையின் இருபுறமும் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு மதகுகளை (Cross Culvert) மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் தூர்வார வேண்டும். மழைநீர் வடிகால்களில் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டுள்ள கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன் (மத்திய சென்னை), டாக்டர் கலாநிதி வீராசாமி (வட சென்னை), முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் (தென் சென்னை), சசிகாந்த் செந்தில் (திருவள்ளூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆர்.டி.சேகர், த.வேலு, இ.பரந்தாமன், ஜெ.கருணாநிதி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, அ. வெற்றி அழகன், ஜே.ஜே. எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கே.பி. சங்கர், கா.கணபதி, ஜோசப் சாமுவேல், ஜே.எம்.எச்.அசன் மௌலானா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெகுமரகுருபரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், கூடுதல் ஆணையாளர்கள் டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, (சுகாதாரம்), திருமதி ஆர்.லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எம்.பி. அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), நே.சிற்றரசு (பணிகள்), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு (ம) நிதி), தா.இளைய அருணா (நகரமைப்பு) நியமனக் குழு உறுப்பினர் சொ.வேலு, மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சார வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பி.எஸ்.என்.எல்., இரயில்வே உள்ளிட்ட சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ஒவ்வொரு மாணவரையும் வேலை வாய்ப்பைப் பெறும்

# திறன்மிக்க மாணவராக உருவாக்குவதே லட்சியம்!

## ‘நான் முதல்வன் திட்டம்’ கருத்தரங்கில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,ஆக.18–

**சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில், மாநில அள விலான `நான் முதல்வன் திட்டம்’ கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்தரங்கில் பேராசிரியர்களுக்கு விரு துகள் வழங்கிப் பேசினார்.**

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய தாவது:

இந்த மாபெரும் நிகழ்ச்சியானது, நம் பெருமைமிகு அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பொறியியல் மற்றும், கலை, அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டுள்ளீர்கள்.

### கல்வி – வேலைவாய்ப்பு!

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ்நாடு இன்றைக்கு மாபெரும் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. தொடக் கக் கல்வி முதல் உயர் கல்வி வரை நம் மாணவர்களின் கல்விக் குத் துணை நிற்கும் விதமாக ஏராளமான திட்டங்களை நம் ‘திரா விட மாடல்’ அரசு செயல்படுத்தி வருகிறது.

`முதலமைச்சரின் காலை உணவு திட்டம்’, `புதுமைப்பெண் திட்டம்’, `தமிழ்ப் புதல்வன் திட்டம்’, `நான் முதல்வன் திட்டம்’ போன்ற திட்டங்களில் எண்ணற்ற சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘எல் லோரும் கல்லூரிக்கு வரவேண்டும். உயர்கல்வி பயில வேண் டும்’ என்று முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று அறிவித்தார்கள். வங்கிகள் மூலம் கல்விக் கடன்களை வழங்கினார்கள். கல்விக் கடனுக்கான வட்டியையும் தள்ளுபடி செய்தார்கள்.

### சிறப்பான அறிவிப்பு!

இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் நம் அரசுப் பள்ளி மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்கும் போது அவர்களுக்கான முழு கல்விச் செலவையும், முதல் விமானப் பய ணச் செலவையும் நம் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்ற சிறப்பான அறிவிப்பை அறிவித்துள்ளார்கள்.

இந்தியாவில் முதன்மைக் கல்வி நிறுவனங்களில் சேர்கிற அர சுப் பள்ளி மாணவர்களுக்கான கல்விச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்ற திட்டத்தையும் அறிவித்துள்ளார்கள். புது மைப்பெண் திட்டம் வந்த பிறகு உயர் கல்வியில் சேர்கிற மாண விகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இந்திய அளவில் `கிராஸ் என்ரோல்மெண்ட் ரேஷியோ’வில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது. ஜி.இ.ஆர்ஐ பொறுத்தவரை



ஒட்டுமொத்த இந்திய நாடும் 50 சதவிகிதத்தைத் தாண்டுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், நம் தமிழ்நாடு 100 சத விகிதத்தை எட்டுவதற்கான திட்டங்களையெல்லாம் செயல்படுத் திக் கொண்டிருக்கிறது.

### தலைசிறந்த கல்வி!

இரண்டு நாட்களுக்கு முன்பு `நேஷனல் இன்ஸ்ட்டிட்யூட் ரேங்க்கிங் ஃப்ரேம் வொர்க்’ சார்பாக, வெளியிடப்பட்ட அறிக்கை யில் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலம், தமிழ்நாடு என்ற பெருமையை நம் மாநிலம் பெற்றிருக் கிறது. குறிப்பாக நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாக, நம் அண்ணா பல்கலைக்கழகம் அந்தப் பெருமையை அடைந்திருக்கிறது.

அரசு ஏராளமான திட்டங்களை உருவாக்கித் தந்தாலும், அத னைக் களத்தில் செயல்படுத்தி, உயர் கல்வியில் தமிழ்நாட்டைத் தலைநிமிரச் செய்துள்ள உங்கள் அத்தனைப் பேருக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் வணங்கங்களையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

### கனவுத் திட்டம் மட்டுமல்ல!

இந்தத் திட்டம் நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டம் மட்டுமல்ல. இலட்சக்கணக்கான இளைஞர்களின் கனவை நிறை வேற்றி வருகிற திட்டமாகவும் இந்தத் திட்டம் இங்கே உயர்ந்து நிற்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 31 லட்சம் இளைஞர் கள் பயன் பெற்றுள்ளார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

இப்படி, உயர்கல்வியில், வேலைவாய்ப்பில் இன்னும் பல உய ரங்களைத் தொட `நான் முதல்வன்’ திட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டிய தேவை இருக்கிறது. `நான் முதல்வன்’ திட்டம் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கிறது. இனி, எந்தத் திசையில் அது செல்ல வேண்டும். இன்னும் அதிகமான வெற்றி களைக் குவிக்க முடியும் என்பதற்கான வழிமுறைகளை உரு வாக்குவதே, இந்தக் கருத்தரங்கத்தின் ஒரே நோக்கம்.

> **“ தமிழ்நாட்டின் உயர்கல்வி இன்னும் பல உயரங்களைத் தொடுகிற வகையில், அனைவரும் ஒருங்கிணைந்து செயல் படுவோம். இன்னும் பல லட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சியையும், வேலை வாய்ப்பையும் பெற, நாம் அவர்களுக்கு என்றென்றும் துணை நிற்போம். ”**

கல்லூரிகளில் பாடத்திட்டத்தின்படி பாடம் நடத்தப்படுகிறது. பல் கலைக்கழகங்கள் தேர்வுகளை நடத்துகின்றன. இதைத்தாண்டி ஒவ்வொரு மாணவரையும் திறன்மிக்க மாணவராக, வேலை வாய்ப்பைப் பெறுகின்ற திறமையைப் பெற்றவராக உருவாக்க வேண்டும். இதற்காகத்தான் `நான் முதல்வன்’ திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

குறிப்பாக, கேம்பஸ் இன்டர்வியூ நடத்த வேண்டும் என்றால், இரண்டு விஷய ங்கள் முக்கியம். ஒன்று நிறுவனங்கள் எதிர்பார்க் கிற திறன்கள் பெற்றவர்களாக மாணவர்கள் இருக்க வேண்டும். ஸ்கில் லேப், ஸ்கில் பேஸ்டு சிலபஸ் கோச்சிங், காலேஜ் ரேங்க்கிங் போன்றவை கல்லூரிகளுக்கு மிகமிக அவசியம். இவை இருந் தால்தான் நிறுவ னங்கள் கல்லூரிகளை நாடி வரும்.

### கூட்டு முயற்சி!

இத்தகைய தரத்தை அடைய, ‘நான் முதல்வன்’ திட்டம் என் றும் துணை நின்று வருகிறது. மாணவர்களுக்கு திறன் பயிற்சி கள் சென்றடைய வேண்டும் என்றால், விரிவுரையாளர்கள் அந் தத் திறன் பயிற்சியைச் சொல்லித்தர வேண்டும். எனவேதான் பேராசிரியர்களுக்கும் விரிவுரை யாளர்களுக்கும் இன்று `நான் முதல்வன்’ திட்டப் பயிற்சிகளை வழங்குகிறோம்.

இது ஒரு கூட்டுமுயற்சி. கல்லூரிகளும் மாணவர்களும் தருகிற ஒத்துழைப்புதான் `நான் முதல்வன்’ திட்டத்திற்கு உரிய பயன்க ளைத் தரும். எனவே, ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்படும் அனைத்து முன்னெடுப்புகளிலும், அனைத்துக் கல்லூரிகளும் பங்கேற்க வேண்டும்.

### ஆக்கப்பூர்வமான கருத்துகள்!

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்று `நான் முதல்வன்’ திட்டத்தை இன்னும் சிறப்புடன் செயல்படுத்த உங்கள் கருத்துரைகளை வழங்கியிருக்கிறீர்கள். அவற்றை கவனமுடன் பரிசீலித்து ஆக் கப்பூர்வமான கருத்துகள் அடிப்படையில் இத்திட்டத்தினை மேம் படுத்திட, நம் கழக அரசு தயாராக இருக்கிறது.

தமிழ்நாட்டின் உயர்கல்வி இன்னும் பல உயரங்களைத் தொடுகிற வகையில், அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படு வோம். இன்னும் பல லட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சியையும், வேலை வாய்ப்பையும் பெற, நாம் அவர்களுக்கு என்றென்றும் துணை நிற்போம். மாநில அளவிலான இந்தக் கருத்தரங்கம் வெற்றி பெறட்டும். இங்கு விருதுகளைப் பெற்றுள்ள கல்லூரிகள் மற்றும் நிர்வாகிகளுக்கு மீண்டும் என் வாழ்த்துகளையும் பாராட் டுகளையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர் பொன்முடி, உயர் கல்வித்துறைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழ கத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னசென்ட் திவ்யா ஐ.ஏ.எஸ்., தொழில்நுட்பக் கல்வியியல் இயக்குநர் ஆப்ரகாம் ஐ.ஏ.எஸ்., கல்லூரிக் கல்வி இயக்குநர் கார்மேகம் ஐ.ஏ.எஸ்., ‘நான் முதல் வன்’ முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாஷ், திட்ட இயக்கு நர் சாந்தி, `நான் முதல்வன்’ திட்ட அலுவலர்கள் செரீஃப் அஞ்சனா, சோமராஜேஸ்வரன் ராஜா, அருண்குமார், குமரேசன் மற்றும் கல்லூரித் தாளாளர்கள், பேராசிரியர்கள், அரசு அதிகாரிகள், அலு வலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.